

வாழ்க தமிழ்


# தமிழர் பண்பாடு


TAMIL CULTURE









# குறிப்புச் சட்டம்

**1. சங்கத் தமிழ் அறிமுகம்**

Introduction to Sangath Tamil

**2. தமிழரின் ஈகைத்திறம்**

The talent of the Tamils

**3. விருந்தோம்பும் பண்பு**

The characteristic of hospitality

**4. புலமை**

Scholarship

**5. வீரம்**

Valor

# குறிப்புச் சட்டம்

**6. நன்றி மறவாத் தன்மை**

Thanks giving forget fulness

**7. பழக்க வழக்கங்கள்**

habits

**8. அறிய உதவும் சான்றுகள்**

Evidence to help learn







# 1. சங்கத் தமிழ் அறிமுகம்

INTRODUCTION TO SANGATH TAMIL

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்களும் சங்க இலக்கிய நூல்கள் எனப் போற்றப்பட்டு வருகின்றன.



சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவரும் சங்கம் வைத்துத் தமிழ் மொழியினை வளர்த்தனர்.
இச் சங்கம் முதல், இடை. கடை என மூவகைப்படும்.
சங்க இலக்கியம் என்ற தொகுப்பில் உள்ள பாட்டுக்களின் காலம் கி.மு.500 முதல் கி.பி.100 வரை என்று கூறுவர்.


நாட்டின் மூலை முடுக்குகளிலும் நகரங்களிலும் வாழ்ந்த புலவர்கள் பல வகைப் பாடல்களை இயற்றியிருந்தனர். அவை பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்தமையால் காலப் போக்கில் பல அழிந்து போயின. இவை நமக்குக் கிடைக்கக் காரணமாய் இருந்தவர் தமிழ் தாத்தா என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் உ.வே.சுவாமிநாதய்யர் அவர்கள்



இவரைப் போன்ற பல அரிய பெருந்தகையாளரின் தளரா முயற்சியின் விளைவே இன்று நம் கையில் சங்கத் தமிழ் வலம் வந்து பொங்கிப் பொலிவுடன் மிளிர்கின்றது. இத்தகைய கிடைத்தற்கு அரிய பொக்கிஷத்தினைப் பொன்னேபோல் போற்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் தலையா கடமைகளுள் ஒன்றாகும்

சங்கம் என்பது அறிஞர், அறவோர் பலர் கூடி அமைக்கும் அமைப்பாகும்.' பழந்தமிழ் நாட்டில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன. மதுரை, கபாடபுரத்தில் முதல் இரண்டு சங்கங்களும் தோன்றி மறைந்தபின், பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் மூன்றாம் தமிழ்ச் சங்கம் நடந்தது என்றும் கருதப்பட்டது. அத்தகய மூன்றாம் தமிழ்ச் சங்க நூல்களே எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்





# சங்கத் தமிழரின் ஈகைத் திறம்

The talent of the Tamils

, “ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிற்கு”
என்ற பொய்யாமொழியின் பொன்மொழிக்கிணங்க
சங்கத்தமிழர் ஈகையில் தழைத்தோங்கி விளங்கினர்.
இதற்கு முதற்கண் கடையெழு வள்ளல்களை சான்றாகக்
கூறலாம்.

, நறுமணம் நல்கும் நறுமுல்லைக் கொடி, காற்றல் துவண்டு படர இயலாமல் வருந்துவதாய் எண்ணித் தன் உயரிய தேரினையே அக்கொடி படர நல்கினான் பாரிவள்ளல்.



கார்மேகம் கண்ட கலாப மயில் தன் அழகிய தோகையினை விரித்தாடுதலைக் கண்டான் பேகன். கடுங்குளிரதனிலே கலாப மயில் நடுக்குற்று நலிகிறதோவென எண்ணி மனம் கசிந்தான். உடனே தன் பொன்னாடையை பாங்காய் அதன் மேல் போர்த்தியே மனம் நெகிழ்வுற்றான்

கிடைத்தற்கரிய தீஞ்சுவை நெல்லிக்கனியினை தாம் சுவைத்து வாழ்தல் நன்றன்று என்றெண்ணி தன்னைக்காட்டிலும் தமிழ் வாழவேண்டும் என்ற பெருந்தகைமை உள்ளத்துடன் இன் தமிழ்ப் புலமை பெற்ற தமிழ் மூதாட்டிக்கு அதனை ஈந்து சிறப்பு செய்வித்தான் அதியமான்

“இடுக்கண் உடையுழி ஊற்றுகோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்” என்பதற்கிணங்க, துன்பத்தில் உழன்று வாடி வருந்தும் கலைஞர் தம்மை தன் இனிய சொற்களால் தேற்றுவித்தும். அவர்கள் வறுமையினைப் போக்க தன்னிடம் உள்ள உயர்ஜாதிக் குதிரைகளையும் மற்றும் பொருள்களையும் நல்கி சிறப்பித்தவனே வள்ளல் காரி என்பவன்.

ஒளிர்மிக்கதாய் சுடருடன் பிரகாசிக்கும் கிடைத்தற்கரிய நீலமணியினையும். அதைப் போன்றே நாகதேவதையின் அருளால் தனக்குக் கிடைக்கப் பெற்ற கலிங்கம் என்ற ஆடையினையும் கூட தன்னிடம் யாசித்து வந்த இரவலர்களுக்கு இன்முகத்துடன் நல்கி அவர்தம் முகம் மற்றும் அகமலர்ச்சியினைக் கண்டு களித்தவன் அண்டிரை ஆய் என்ற வள்ளல்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி" என்ற பொன்மொழிக்கேற்ப. பருவம் பொய்த்தல் போன்ற காலங்களில் மக்கள் பசிப்பிணியகற்றும் மாமருந்தாய்த் திகழ்ந்தவன் நள்ளி என்ற வள்ளல் பெருந்தகை. அவாறு இரவலராய் வந்தோரின் பசிப்பிணயைப் போக்க எண்ணற்ற திரவியங்களை வழங்கி அதில் அவர்களின் மன நிறைவினைக் கண்டு பேரானந்தம் எய்தியவன் அவன்

அம்பலத்து இறைவன் போல் தன் திறமையினால் கூத்தாடி மக்களை மகிழ்வித்து வந்த கூத்தர்களுக்கு வளமான நாடுகள் பலவற்றினை நல்கி மகிழ்ந்தவன் கொல்லியாண்ட வல்வில் ஓரி என்ற மன்னன்.



# விருந்தோம்பல்

## the characteristic of hospitality



“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் நன்று”
என்ற பொன்மொழிக்கிணங்க, சங்க கால மக்கள் தன் உற்றார் உறவினரேயன்றி, புதிதாக தன் இல்லம் நாடி நள்ளிரவில் வருபவர்களுக்கும், ‘மருந்தே ஆயினும் விருந்தோடு உண்’ என்ற கொள்கையினைக் கொண்டு வாழ்ந்து அவர்களுக்கு அறுசுவை அடிசில் நல்கி சிறப்பு செய்வித்ததை இலக்கியத்தில் கண்டு இன்பம் துய்க்கலாம்.

“வஇவை ஆற்றுப்படை நூல்களில் விரவி வருகின்றன. வள்ளல் பெருந்தகையராய் விளங்கிய மன்னர்களைப் பாடி பரிசில் பெற்ற புலவர் பலர் தன் எதிரே, தன்போல் பரிசில் பெற வரும் பிற புலவர்களை அம்மன்னர்களிடம் வழிநடத்தும் மாண்பின் வாயிலாக அம்மன்னர்களின் விருந்து உபசரிப்புகள் புலனாகின்றன.

பொருநராற்றுப்படையினில், முடத்தாமக் கண்ணியார், கரிகாற்பெருவளத்தானின் விருந்தோம்பும் பண்பினையும். ஈகையின் மாண்பினையும் எடுத்தியம்பும் பாங்கினை காணலாம்.




கரிகால் பெருவளத்தான், உணவு அருந்தும் சமயத்தில் வரும் இரவலர்களுக்கு, அறுகம்புல்லைத் தின்று கொழுகொழுவென்று வளர்ந்த செம்மறியாட்டின் வேகவைக்கப்பட்ட அழகிய பருமனான தொடையின் வெந்த கறியினையும், இரும்புக் கம்பியில் கோர்த்துக் கட்டப்பட்ட கொழுமையான இறைச்சியாகிய பெரிய தசைத்துண்டினையும் தின்னுங்கள் தின்னுங்கள் என்று வற்புறுத்திக் கொடுப்பான்.

கஅதோடு இனிமையான சுவையுடயனவும், பல வடிவங்களை உடைய தின்பண்டங்களைக் கொண்டுவந்து அவற்றினையும் தின்னுமாறு கூறி அமரச்செய்து, மேலும் விருந்தினர்களை மகிழ்விக்கும் பொருட்டு, இலக்கணம் பொருந்திய முழவின் இசையுடன் சேர்ந்த பாடலை விறலியர்கள் தாளத்திற்கேற்ப பாடிக்கொண்டே ஆடவும் படியான காட்சியைக் கண்டும், காதுக்கினிய இசையினைத் துய்த்தும் உணவு அருந்தச் செய்வான்.

மேலும் முல்லை மொட்டினைப் போல் வரிகள் இல்லாமல் முனை உடையாமல் இருந்த அரிசியைக் கொண்டு விரல் போல் நீண்டு காணப்படும் சோற்றினையும், அதற்குத் தொட்டுக் கொள்ள நன்றாகப் பொரிக்கப்பட்ட பல்வேறு காய்கறிகளையும் கழுத்துவரை உண்ணச் செய்வான். இவ்வாறு இரவும் பகலும் இறைச்சியை மென்று தின்றதன் காரணமாக அந்த இரவலர்களுடைய பற்கள் முனை முணங்கிக் காணப்பட்டன.



# புலமை

## Schlorship

சங்க இலக்கியப் பாடல்கள் 2381. இவற்றினைப் பாடிய புலவர்க்களுள் பெயர் தெரிந்த புலவர்கள் 473 பேர். 102 பாடல்களுக்குப் புலவர்களின் பெயர் தெரியவில்லை. கபிலர் என்ற புலவர் மட்டுமே 235 பாடல்கள் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது. வேறு புலவர் நால்வர் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளனர். சிற்சில பாடல்களும், ஒவ்வொரு பாடல் மட்டுமே பாடிய புலவர்கள் மிகப் பலர்.

அப்புலவர்களுள் சிலர் நகரங்களைச் சார்ந்தவர்கள். பலர் சிற்றூர்களைச் சார்ந்தவர்கள். கற்பிக்கும் ஆசிரியர், பொன்வணிகர், ஆடை வணிகர், மருத்துவர், தச்சர், சோதிடர், பொற்கொல்லர், கொல்லர், சேனைத்தலைவர், அமைச்சர், பாணர், கூத்தர் முதலான பல்வேறு தொழில் செய்து வந்தவர்களும் கூட மிகுந்தப் புலமையுடன் பாடல் புனைந்துள்ளமை அறியவருகின்றது

இவர்களேயன்றி, பெண்பாற் புலவர்கள் முப்பது பேர், அரசர்களாக, அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து புலமை பெற்றுப் பாடியவர்கள் முப்பத்தொருவர்.

இவ்வாறு இலக்கியம் பாடிய புலவர்கள் பல்வகைப்பட்டவர்களாக இருந்துள்ளமையை சங்க இலக்கியங்கள் பகர்கின்றன.

அதோடு அரசர்களும் புலமை பெற்றிருந்தமையையும் அறியமுடிகின்றது. சங்க கால அரசர்கள் புலவர்களை ஆதரித்துப் போற்றியதுடன் நில்லாமல் தாங்களும் புலவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசன் கல்வியின் சிறப்பைப் பற்றி ஒரு பாடல் பாடியுள்ளான். “வேண்டிய உதவிகளைச் செய்தும், மிகுதியான பொருள்களைக் கொடுத்துமாவது கல்வியினைக் கற்பது நல்லது என்பது அப்பாடல் கருத்து. பணிந்து பின் நிற்பதைப் பற்றிப் பொருள்கொள்ளாமல், கற்றோரை அணுகி வணங்கி கற்றுக் கொள்ள வேண்டும். ஒரே தன்மையான பிறப்பினை உடையவரயினும், சகோதரர்கள் நால்வருள்ளும் கல்வியின் சிறப்புக் காரணமாய் விளங்கும் இளைய மகனையே தாயும் விரும்புவாள். அரசும் மூத்தவனை விரும்பி வரவேற்காமல் இளையவனாகிய கற்றவனையே வரவேற்கும்



# வீரம்

சங்க கால மக்கள் காதலையும் வீரத்தினையும் தம் இரு கண்ணெனப் போற்றிப் புரந்தனர். அதனால் தான் அவ்விலக்கியங்கள் அகம், புறம் எனப் பகுக்கப் பட்டுள்ளது.

புறத்திணை பற்றி அறிந்திட புறநானூற்றுப்பாடல்களும், அகத்திணை பற்றி அறிந்திட அகநானூற்றுப் பாடல்களும் பெரிதும் துணைபுரிகின்றன.

அகத்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அன்பின் ஐந்திணைகளாக வகுக்கப் பட்டுள்ளன.

புறத்திணைகள் வெட்சி. கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் போன்றவகையில் வகை செய்யப்பட்டன.






இவையே அன்றி, கைக்கிளை மற்றும் பெருந்திணை ஆகியனவும் மக்கள் வாழ்வியலின் ஒழுகலாறுகளை விளக்குவதாய் அமைந்தன.

மேலும் இவற்றில் கூறப்படாது மறந்து விட்ட செய்திகளைக் கூற பொதுவியல் என்ற திணையும் இருந்தது.

சங்க கால மக்கள் வீரம் மிக்கவர்களாய் விளங்கினர். போர்களை இன்முகம் காட்டி வரவேற்றனர்.

“மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லை
தன்னுயிர் அஞ்சும் வினை”
என்பதற்கிணங்க, தன்னுயிரைப் பற்றி சிறிதும் கலக்கமுற்றாரில்லை. ஆடவரேயன்றி பெண்களும் வீரம் மிக்கவராய் சிறந்து விளங்கினர்.

வீரத்தாய் ஒருவள் போர்க்களத்தில் தன் மகன் புறமுதுகிட்டு ஓடி ஒளிந்த அல்லது மடிந்தான் எனக் கேட்ட மாத்திரத்திலேயே அவனுக்குப் பால் கொடுத்த முலையை அறுத்தெறிகிறாள். என்னே அவ்வீரத்தாயின் நாப் பற்றும், துணிச்சலும்.

# நன்றி மறவாத் தன்மை

THANKS GIVING FORGET FULNESS






செய்ந்நன்றி மறவாமை என்பது செந்தமிழ் நாட்டு மக்களின் தலையாய பண்புகளுள் ஒன்றாகும். நன்றிமறந்தவர்களை இங்கு காண்பது அரிது. சங்ககாலக் கவிஞர்கள் தங்களை பேணிப் புரந்த வள்ளல் பெருமக்களையும், அவர்தம் நாடுகளையும், தாங்கள் கற்ற கல்வி வாயிலாக உவமையாகவும், பிறவற்றாலும் எடுத்தியம்பியுள்ளனர். எப்படி தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை கம்பர் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளாரோ, அவ்வாறே புலவர் பெருமக்களும் புரவலர்களைப் பலவாறு வாழ்த்தி வழிபட்டுள்ளனர். இதனாலேயே வள்ளுவப் பெருந்தகையும் செய்ந்நன்றியறிதல் என்ற ஓர் அதிகாரத்தினையே எடுத்தாண்டுள்ளார்.




# பழக்க வழக்கங்கள்:

HABIT

வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை வேத்தியல், பொதுவியல் என்று பகுத்துக் காண்பது தமிழ்நெறி.

பெண்கள் செந்நிறம் பூசி தான் பூப்பு எய்திய செய்தியை வெளியிடுவர்.

தாலியைப் புதுநாண் என அழைத்து அதனை ஒரு காப்பீடாகக் கருதுவர்.

நிறைமதி நாளில் விடியற்காலையில் நடைபெறும் திருமணத்தில் உழுத்தம் பருப்பு வடையுடன் பெரு விருந்து அளிக்கப்படும். பந்தல் போட்டு புதுமணல் பரப்பி, விளக்குவைத்து, மாலைகள் தொங்கவிடப்படும்

# அறிய உதவும் சான்றுகள்

EVIDENCE

சங்க கால மக்களின் வாழ்க்கை வரலாற்றினை, இலக்கியம், கல்வெட்டுக்கள், தொல்பொருள் அகழ்வாராய்வுகள், அவர்கள் பயன்படுத்திய பல்வகைப் மட்பாண்டங்கள், செங்கல் கட்டமைப்புகள், பண்டைய எழுத்து முறை, அகழ்ந்தெடுக்கப்பட்ட செயற்கைப் பொருட்கள், குகைகள் மற்றும் மட்பாண்டங்களில் காணலாகும் எழுத்து வடிவங்கள் ஆற்றுப் படுகைகளில் கிடத்த நாணயங்கள், அரசர்களின் சின்னங்க பொறிக்கப்பட்ட நாணயங்கள், ஆகியன சங்க கால மக்களின் வாழ் ஒழுகலாறுகளை அறிய உதவும் சான்றுகளாக விளங்குகின்றன.




**EVIDENCE**

# The Team



**PRESENTATION IS GUIDED BY :** MRS RAJATHY CHANDRAMOHAN

**PRESENTATION IS PREPARED BY:** KARAN.S 11-F

**SCHOOL :** VALLAL S.I ALAGARSAMY CHETTIAR HIGHER SECONDARY SCHOOL CH-13